முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் ஆஜராக சிறப்பு மூத்த வக்கீலாக ஏ.எல்.சோமயாஜி நியமனம்



சென்னை, ஜூலை.31

சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தமிழக அரசு சார்பில் ஆஜராக சிறப்பு மூத்த வக்கீலாக ஏ.எல். சோமயாஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை ஐகோர்ட்டில் மூத்த வக்கீலாக இருப்பவர் ஏ.எல். சோமயாஜி. இவர் ஏற்கனவே 2001ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரை கூடுதல் அட்வகேட் ஜெனரலாகவும், 2013ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை அட்வகேட் ஜெனரலாகவும் பதவி வகித்தவர். இந்தநிலையில் இவரை தமிழக அரசின் சிறப்பு மூத்த வக்கீலாக நியமித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதாவது முக்கியத்துவம் வாய்ந்த சட்ட சிக்கலான தன்மையுடைய வழக்குகளில் இவர் தமிழக அரசு சார்பில் ஆஜராக இந்த புதிய பதவி உருவாக்கப்பட்டு உள்ளது.

இவருக்கு அட்வகேட் ஜெனரலுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அனைத்தும் வழங்கப்படும். இதற்கான உத்தரவை தமிழக கவர்னரின் ஒப்புதலுடன், தமிழக அரசின் பொதுத்துறை முதன்மை செயலாளர் செந்தில்குமார் பிறப்பித்துள்ளார்.

தமிழக அரசின் சிறப்பு மூத்த வக்கீலாக நியமிக்கப்பட்டுள்ள ஏ.எல். சோமயாஜியின் பெற்றோர் அய்யாலு, ஆவுடைதாய் ஆவார். இவருக்கு சொந்த ஊர் நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவி என்றாலும், வளர்ந்தது தூத்துக்குடி. அங்குள்ள கால்டுவெல் மேல்நிலைப்பள்ளியிலும், வ.உ.சி. கல்லூரியிலும் படித்தார். சட்டப்படிப்பை திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் முடித்தார். பார் கவுன்சிலில் வக்கீலாக பதிவு செய்து, 'ஐயர் அண்டு டோலியா' வக்கீல் அலுவலகத்தில் ஜூனியராக சேர்ந்தார்.

இவரை 1995ம் ஆண்டு மூத்த வக்கீலாக சென்னை ஐகோர்ட் அறிவித்தது. ஏராளமான சட்டப்புத்த கங்களை எழுதியுள்ள இவர், கடந்த 10 ஆண்டு களுக்கு மேலாக ஐகோர்ட்டின் விதிகள் உருவாக்கும் கமிட்டியின் செயலாளராக இருந்து வருகிறார்.

கொரோனா ஊரடங்கு காலத்தில்

மாணவர்களின் வீடுகளுக்கு சென்று பாடங்கள் நடத்திய அரசு பள்ளி தமிழ் ஆசிரியை மகாலட்சுமி

கடலூர் கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி பாராட்டு

கடலூர், ஜூலை 31–

கடலூரில் மாணவர்களின் வீடுகளுக்கே சென்று பாடங்களை நடத்திய நடுவீரப்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியை மகாலட்சுமிக்கு கலெக்டர் சந்திர சேகர் சாகமூரி பாராட்டு தெரிவித்தார்.

கடலூர் மாவட்டம் நடுவீரப்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியை மகாலட்சுமி பள்ளி மாணவ மாணவிகளுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு சென்று பள்ளி மாணவ மாணவிகளை அழைத்து சமூக இடைவெளியினை கடைபிடித்து அவர்களுக்கு பத்தாம் வகுப்பு பாடம் கற்பித்து வருகிறார். அவரது வகுப்பு மாணவ மாணவிகளுக்கு மட்டும் அல்லாமல் வேறு பள்ளி மாணவ மாணவிகளாக இருந்தாலும் அவர்களுக்கும் பாடம் கற்பித்தார்.

இது பற்றி தெரியவந்ததும் கலெக்டர் சந்திர சேகர் சாகமூரி தமிழ் ஆசிரியை மகாலட்சுமியை நேரில் வரவழைத்து சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

அப்போது கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி கூறியதாவது: மாணவ மாணவிகள் அனைவருக்கும் இந்த கொரோனா தொற்று பரவி வரும் காலகட்டத்தில் அவர்கள் இருக்கும் இடத்திற்கு சென்று கல்வி போதித்தமைக்கு மிகுந்த பாராட்டுக்கள்.

மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக இதுபோன்ற செயல்களை செய்யாமல் மாணவ மாணவிகள் படிக்கவேண்டும் என்றும் சமுதாயத்தில் படிப்பின் சிறப்பு மற்றும் முக்கியத்துவத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தில் இச்செயல்களை அனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் இருக்கும் இடத்திற்கு சென்று மாணவர்களை ஊக்குவித்தலோடு அங்கு பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றவேண்டும். முக கவசம், கிருமிநாசினி ஆகிவற்றை பயன்படுத்த வேண்டும். சமூக இடைவெளியை கடைபிடிக்கப்பட வேண்டும். மாணவர்களின் கல்வியின் சிறப்பு மற்றும் வாழ்க்கை முக்கித்துவம் ஆகியவற்றை எடுத்துக் கூறி மாணவர்கள் அனைவரும் சிறந்த முறையில் கல்வி கற்க ஆசிரியர்கள் கடுமையான முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

ஆகஸ்ட் மாதம் முழுவதும் கொரோனா தொற்று பரவுதல் காரணமாக பள்ளிக்கூடங்கள் திறக்கப்படாமல் இருக்கும் காரணத்தால் மாணவ மாணவிகள் அவர்கள் இருக்கும் இடத்திற்கு சென்று பாடம் போதிப்பது போன்ற முயற்சி என்பது பாராட்டுக்குரியது.

இணையவழிக் கல்வி மூலமும் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பது மற்றும் மாணவர்களுக்கு நேரில் சென்று நாள் ஒன்றுக்கு 20 அல்லது 40 மாணவர்களுக்கு மேல் கூட்டம் கூட்டாமலும் சமூக இடைவெளியை கடைப்பிடித்தும் கல்வி கற்பிக்க வேண்டும் எனவும், மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள் கல்வியின் ஆர்வத்தை தூண்ட சமுதாயத்தில் நன்கு படித்து மேன்மேலும் உயர வேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரோஸ் நிர்மலா, பள்ளி தலைமையாசிரியர் மற்றும் பலர் உள்ளனர்.

விக்கிரவாண்டியில் குடிமராமத்து பணிகள்: கலெக்டர் அண்ணாதுரை ஆய்வு

விழுப்புரம், ஜூலை 31–

விழுப்புரம், விக்கிரவாண்டியில் நடைபெற்று வரும் குடிமராமத்துப் பணிகளை கலெக்டர் அண்ணாதுரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டத்திற்குட்பட்ட ஒரத்தூர் ஊராட்சியில் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை சார்பாக ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் மதகு சீரமைத்தல் மற்றும் நீர்வரத்து வாய்க்கால் சீரமைப்பு பணிகள் நடைபெற்றுவருவதை கலெக்டர் அண்ணாதுரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து கஞ்சனூர் ஊராட்சி ஏரியில் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை சார்பாக ரூ.43 லட்சம் மதிப்பீட்டில் மதகு சீரமைத்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் கரைகள் பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து மதகு சீரமைத்தல், கரைகளை பலப்படுத்துதல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் உள்ளிட்ட பணிகளை துரிதப்படுத்த பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு கலெக்டர் அண்ணாதுரை உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜவஹர், உதவி செயற்பொறியாளர் அன்பரசு, உதவி பொறியாளர் பாலாஜி, ஞானசேகரன், விக்கிரவாண்டி வட்டாட்சியர் பார்த்திபன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கொரோனாவிலிருந்து 9315 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்: கலெக்டர் மகேஸ்வரி தகவல்

திருவள்ளூர், ஜூலை 31–

திருவள்ளூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிலிருந்து 9315 நபர்கள் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர் என்று கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியுள்ளார்.

இது குறித்து மாவட்ட கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:– திருவள்ளூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் அனைத்து பகுதிகளிலும் போர் கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா தொற்று கண்டறிவதற்காக மாவட்டத்தில் ஆவடி மாநகராட்சி, திருவள்ளூர், திருத்தணி திருவேற்காடு, பூவிருந்தவல்லி நகராட்சிகள், 14 ஊராட்சி ஒன்றியங்களில் 26 பரிசோதனை வாகனங்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ஒரு பரிசோதனை வாகனத்தில் 2 மாதிரி சேகரிப்பு அலகுகள் உள்ளது.

வைரஸ் தொற்று கண்டறிவதற்க்கு, தொடர் பரிசோதனை காரணமாக ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தேவையான சிகிச்சை வழங்கியதன் காரணமாக கடந்த ஜூலை மாதம் முதல் வாரத்தில் 2.6 சதவிகிதமாக இருந்த இறப்பு விகிதம், தற்போது 1.5 சதவிகிதமாக குறைந்துள்ளது. மாவட்டத்தில் 1,23,806க்கும் மேற்ப்பட்டவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில் 13481 கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டு 9315 நபர்கள் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். நேற்று ஒரே நாளில் 443 நபர்கள் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மாவட்டத்தில் 4173 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஒடிசி டெக்னாலஜீஸ் லிமிடெட்

CIN: L51909TN1990PLC019007

பதிவு அலுவலகம்: 5வது தளம், தௌலத் டவர்ஸ், 63, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை 600 010, இந்தியா.

போன் : 91-44-2645 0082, 2645 0083.

இணையதளம் : www.odysseytec.com

இ - மெயில்: investors@ odysseytec.com

அறிவிப்பு

ஒடிசி டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு கூட்டம் 7 ஆகஸ்ட், 2020 வெள்ளிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் இதர விஷயங்களுடன் சேர்த்து 30 ஜூன் 2020 அன்றுடன் முடிவடைந்த காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பரிசீலித்து ஒப்புதல் பெறப்படும் என்பது இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டம் தொடர்பான அறிவிப்பை கம்பெனியின் www.odysseytec.com என்ற இணையதளத்திலும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணையதளத்திலும் மேலும் காணலாம்.

இடம் : சென்னை — தலைவர் மற்றும்

தேதி : ஜூலை 31, 2020 — நிர்வாக இயக்குனர்

இன்ஸ்பிரிசிஸ் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

(முன்னாள் ஆக்செல் ஃப்ரெண்ட்லைன் லிமிடெட்)

CIN : L30006TN1995PLC031736

பதிவு அலுவலகம்: முதல் மாடி, தவ்லத் டவர்ஸ், புதிய கதவு எண். 57, 59, 61 மற்றும் 63, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

தொலைபேசி எண் : 044 4225 2000

இணையதளம் : www.inspirisys.com

மின்னஞ்சல் : nagaraj.v@inspirisys.com

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 29 மற்றும் 47க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் ஆகஸ்ட் 10, 2020 திங்கட்கிழமை அன்று நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த கூட்டம் ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து அங்கீகரிப்பதற்காக கூட்டப்படுகிறது.

இந்த அறிவிப்பின் ஒரு நகல் நிறுவனத்தின் இணையதளம் www.www.inspirisys.com மற்றும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணைய தளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com இல் உள்ளது.

இயக்குநர் குழுவின் உத்தரவுப்படி இன்ஸ்பிரிசிஸ் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக (முன்னாள் ஆக்செல் ஃப்ரெண்ட்லைன் லிமிடெட்)

சென்னை — S. சுந்தரமூர்த்தி

30.07.2020 — கம்பெனி செயலாளர்

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை. அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100

இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 2015, நிபந்தனை 47 மற்றும் நிபந்தனை 29ன் படி ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்கு கம்பெனியின் இயக்குனர் குழு கூட்டம் **ஆகஸ்ட் 6, 2020** வியாழக்கிழமை அன்று காணொலி காட்சி (VC) வாயிலாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் www.esabindia.com என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணையதளங்களிலும் வெளியிடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் சார்பாக

சென்னை — S. வெங்கடகிருஷ்ணன்

31 ஜூலை. 2020 — நிறுவன செயலாளர்

இண்டியன் பேங்க் — இந்தியன் வங்கி — இலாஹாபாத் — அலஹாபாத்

சிறுசேரி கிளை

ஆனந்த் இன்ஸ்டியூட் ஃஆப் ஹையர் டெக்னாலஜி கேம்பஸ், OMR ரோடு, கழிப்பட்டூர், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 103. போன் : 044-27471210.

தங்க நகைகள் பொது ஏல அறிவிப்பு

எங்களது வங்கியில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத காலம் கடந்த கீழ்க்கண்ட நகைகளுக்கு அறிவிப்பு அனுப்பியும் கடன்தாரர் உரிய காலத்தில் பணம் செலுத்தவில்லை, ஆதலால் நகைகள் **'உள்ளது உள்ளபடியே'** ஏலத்திற்கு கொண்டுவரப்படுகிறது. ஏலத்தேதி : **19.08.2020 மாலை 4.00** மணியளவில், இடம் : **இந்தியன் வங்கி, சிறுசேரி கிளை.**

J L Loan A/c எண் & தேதி	நகைக்கடன் பெற்றவர் பெயர் மற்றும் முகவரி	மொத்த எடை (கிராமில்)	நிலுவைத்தொகை (30.07.2020 தேதிப்படி)
6725038596 13.02.2019	**P.N. ரமேஷ்,** எண்.2101, 21வது தளம், பைன்வுட், ஹிராநந்தானி OMR, ஏகாட்டூர் - 603 103.	40.000	ரூ.90,000/-

மேற்கண்ட நபர் இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் நிலுவையில் உள்ள கடன் தொகையை கட்ட தவறினால் வேறு எந்தவித அறிவிப்புமின்றி நகைகள் பொது ஏலத்தில் விடப்பட்டு அந்த பணம் கடன் தொகை மற்றும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்காக உபயோகப்படுத்தப்படும்.

ஏலத்தின் நிபந்தனைகள் : **1.** நகைகளின் தரத்திற்கும் மற்றும் நகைகளின் வகைகளுக்கு வங்கி எந்தவித பொறுப்பையும் ஏற்காது. நகைகள் எப்படி இருக்கின்றனவோ அப்படியே ஏலம் விடப்படும். இவைகள் கடன் பெற்றவர் மற்றும் நகையை வாங்குபவரின் பொறுப்பாகும். **2.** எந்தவித காரணமும் குறிப்பிடாமல் ஏல விண்ணப்பத்தை நிராகரிக்க வங்கிக்கு உரிமை உண்டு. **3.** ஏலத்தில் பங்கேற்று, நகைகளை ஏலத்தில் எடுக்க விரும்புவோர்கள் திரும்பப் பெறக்கூடிய டேவணித் தொகையான ரூ.5000/-ஐ **19.08.2020** அன்று **பிற்பகல் 3.00** மணிக்குள் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவும் அன்றே **மாலை 4.00** மணிக்கு **இந்தியன் வங்கி, சிறுசேரி கிளையில்** ஏலம் நடைபெறும்.

இடம் : சென்னை

தேதி : 30.07.2020 — **கிளை மேலாளர், இந்தியன் வங்கி.**

டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ADITYA BIRLA TANFAC

பதிவு அலுவலகம் : 14, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ், கடலூர் 607 005. தமிழ்நாடு

Website: www.tanfac.com Email: invreln.tanfac@adityabirla.com

தொலைபேசி : +91 4142 239001-5 - தொலைநகல் : + 91 4142 239008

CIN : L24117TN1972PLC006271

அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 29 மற்றும் விதி 47-ன் படி ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை அறிக்கையை, ஏனைய அலுவல்களுக்கிடையே, பரிசீலித்து ஒப்புதல் வழங்க கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் ஆகஸ்ட் 7, 2020 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.tanfac.com மற்றும் கம்பெனியின் பங்குகள் லிஸ்டிங் செய்யப்பட்டுள்ள BSE லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

இயக்குநர் குழு உத்தரவுப்படி

டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் சார்பாக

இடம் : கடலூர் — (அர்ச்சனா T)

நாள் : 29.07.2020 — கம்பெனி செயலாளர்

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

JJM/ஊ.நி8/1516/2020 நாள்: 29.07.2020

ஜல் ஜீவன் மிஷன் 2020-21- நிலை III (ஒப்பந்தபுள்ளி அழைப்பு)

அ) முழுமையான விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதள முகவரியினைப் பார்வையிடம்.

ஆ) தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் ஜல் ஜீவன் மிஷன் 2020-21 திட்டத்தின் கீழ் திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, திருச்செந்தூர், உடன்குடி, சாத்தான்குளம், கோவில்பட்டி மற்றும் கயத்தார் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் வசதி வழங்குதல் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (இரட்டை உறை முறை) சிப்பங்களில் வரவேற்கப்படுகிறது.

.) ஒப்பந்த புள்ளி நஉனாவினை **www.tntenders.gov.in** என்ற இணைய தள முகவரியில; இலவசமாக **03.08.2020 முதல் 18.08.2020** வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

1. மின்னணு ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் : **18.08.2020 மாலை 3.00 மணி**
2. மின்னணு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசிநாள் மற்றும் நேரம் : **18.08.2020 மாலை 3.00 மணி**
3. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **18.08.2020 மாலை 4.00 மணி**

செ.ம.தொ.இ.2881/ஒப்பந்தப்புள்ளி /2020 — திட்ட இயக்குநர் (மா. ஊ. வ. மு). தூத்துக்குடி

பெயர் மாற்றம்

SHANU.H, தந்தை பெயர்: Late. Ramesh Devnani, பிறந்த தேதி: 09.02.1984, ப்ளாட் 2B, 17/2, 1வது மாடி, பிவிஎன் அபார்ட்மெண்ட், சாத்துல்லா தெரு, சென்னை–600 017, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHANU**, என்று அழைக் கப்படுகிறேன்.

SHANU.H

பெயர் மாற்றம்

Given Name: Udhayaraj, Sur Name: Boopalan, தந்தை பெயர்: Boobalan, பிறந்த தேதி: 28.03.1979, ரூம் நெ.5, ஈசிஆர் ரோடு, Suga Jeeva Gods Assembly, ஈஞ்ஜம்பாக்கம், காஞ்சிபுரம் – 600 115, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GIVEN NAME: UDHAYARAJ, SUR NAME: BOOBALAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Given Name: Udhayaraj,
Sur Name: Boopalan

பெயர் மாற்றம்

Linesh Sanatkumar Thakkar, தந்தை பெயர்: Sanatkumar Bhavani Thakkar, பிறந்த தேதி: 03.01.1966, நெ.21, 9வது தெரு, Dr.ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை– 600 004, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **LINESH SANATKUMAR SUNDRANI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Linesh Sanatkumar Thakkar

பெயர் மாற்றம்

MOHAN KUMAR DHANUS KODI, தந்தை பெயர்: Mohan Kumar, பிறந்த தேதி: 16.10.1999, நெ.6/11, அண்ணா நகர் 1வது தெரு வேளச்சேரி, சென்னை–600 042, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHANKUMAR DHANUSHKODI**, என்று அழைக் கப்படுகிறேன்.

MOHAN KUMAR
DHANUS KODI

பெயர் மாற்றம்

Jayanthi Ramasamy, கணவர் பெயர்: Ramasamy, பிறந்த தேதி: 15.04.1957, F1, நெ.5, குறிஞ்சி ப்ளாட்ஸ், பொன்னம்பலம் சாலை, கணபதி நகர், கொலப்பாக்கம், சென்னை–600 122, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **JAYANTHE RAMASAMY,** என்று அழைக் கப்படுகிறேன்.

Jayanthi Ramasamy

பெயர் மாற்றம்

Kowshipriya Chockalingam, தந்தை பெயர்: Lakshmanan Chockalingam, பிறந்த தேதி: 24.08.1995, நெ.7/B, ராதாகிருஷ்ணன் தெரு, பொன்னம்மாள் நகர், நெசப்பாக்கம், சென்னை–600 078, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Kowshipriya Lakshmanan Chockalingam,** என்று அழைக் கப்படுகிறேன்.

Kowshipriya Chockalingam

பெயர் மாற்றம்

Prakash Shashaang Balaji, தந்தை பெயர்: Doraisamy Prakash, பிறந்த தேதி: 23.08.2000, நெ.7N, Ramaniam Sanjivini, 72/1, எல் பி ரோடு, திருவான்மியூர், சென்னை– 600 041, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Prakash Shashaank Balaji,** என்று அழைக்கப்படுகிறேன்.

Prakash Shashaang Balaji

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சமூகம், திருத்தணி

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டை, சவட்டூர். நெ.17 விலாசம் கொண்ட வீட்டில் வசிக்கும் மனுதாரர் திரு.A.P.சேகர் என்பவர் அவரது தந்தை வழி பாட்டி ராஜம்மாள் க/பெ.சீனிவாசன் கடந்த 23.01.2002 ஆம் தேதியில அவரது வீட்டில் இறந்ததை பதிவு செய்யக்கோரி காலதாமதமாக மனு செய்துள்ளார். இதில்,எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினத்திற்க்குள் திருத்தணி கோட்டாட்சியர், பள்ளிப்பட்டு வட்டாட்சியர், பொதட்டூர்பேட்டை வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் எழுத்து பூர்வமாக சமர்பிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு இறப்புச் சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உமா கார்த்திகேயன்.
வருவாய் ஆய்வாளர்
பொதட்டூர்பேட்டை

பெயர் மாற்றம்

Tawfeeq Ahmad, தந்தை பெயர்: Syed Ahamed Kabeer Jabarullah, பிறந்த தேதி: 05.02.2001, நெ.8/2, மிகை வினாயகர் கோவில் தெரு, வடபழனி, சென்னை–600 026, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **TAWFEEQ AHMAD JABARULLAH,** என்று அழைக் கப்படுகிறேன்.

Tawfeeq Ahmad

சிதம்பரம் சார் ஆட்சியர் (நடுவர் நீதிமன்றம்)

கடலூர் மாவட்டம்,
காட்டுமன்னார் கோயில் வட்டம்,
கீழபருத்திக்குடி,
முள்ளங்குடி போஸ்ட் என்ற
முகவரியில் வசித்து வரும்
நாகராஜன் குமாரர் N.செல்வம்.
... மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர்,
காட்டுமன்னார் கோயில்.
... எதிர்மனுதாரர்

மனுதாரர் பொது அறிவிப்பு

மனுதாரர்N.செல்வம்த/பெ. நாகராஜன் தனது மனைவி தில்லைக்கரசி தந்தை / தாய் வேலாயுதம் – தனம் தம்பதியினருக்கு கடந்த 10.05.1983ம் தேதி அன்று சுக பிரசவத்தில் சிவன் கோயில் தெரு, லால்பேட்டை, காட்டுமன்னார் கோயில் வட்டம் என்ற முகவரியில் பிறந்தார். மேற்படி பிறப்பினை கவனக்குறைவாக பிறப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய மறந்து விட்டனர். மேற்படி பிறப்பு சான்று அவசியம் தேவைப்படுவதால் மேற்படி பிறப்புச் சான்று வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங் களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் எழுத்து மூலமோ நேரிலோ ஆஜராகி தெரிவிக்கலாம். தவறினால் இம்மனு மீது ஏதேனும் ஆட்சேபனை இல்லை எனக்கருதி ஒருதலைபட்சமாக ஏற்கப்பட்டு உத்தரவிடப்படும் என்பதை இதன் அறியவும்.

N.செல்வம்,
மனுதாரர்

பெயர் மாற்றம்

அய்யாதுரை காதர், தந்தை பெயர்: அய்யாதுரை, பிறந்த தேதி: 24.06.1930, நெ.13/12, கோபால் தெரு, வடபழனி, சென்னை– 600 026, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **காதர் முகையதீன்,** என்று அழைக்கப்படுகிறேன்.

அய்யாதுரை காதர்

பெயர் மாற்றம்

S.V.Magizhvael Aadhiyan, பிறந்த தேதி:28.12.2017, நெ.2, ஜெயலட்சுமி தெரு, அஸ்தினாபுரம், சென்னை–600 064, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **S.V.MAGIZH AADHIYAN,** என்று அழைக்கப்படுகிறார்.

S.Sckandesh Sankar,
தந்தை

பெயர் மாற்றம்

V.Sudha, கணவர் பெயர்: L.Vasudevan, பிறந்த தேதி: 14.05.1969, நெ.16, கற்பகம் நகர் 1வது தெரு, சேலையூர், சென்னை–600 073, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **S.SUDHA,** என்று அழைக் கப்படுகிறேன்.

V.Sudha

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு. C.T. அறிவழகன், S/o. D. திருஞானசம்மந்தம் (வயது – 58) வசிப்பிடம், நெ. A20, எம்.எம்.டி.எ. காலனி, அரும்பாக்கம், சென்னை – 600 108. இவர் மேற்கண்ட விலாசத்தில் இருந்து 27.07.2020 அன்று இரு சக்கர வாகனத்தில் ஒரிஜினல் பேரண்ட் டாக்குமெண்ட் பிளாஸ்டிக் கவரில் வைத்துக்கொண்டு வில்லிவாக்கத்தில் உள்ள ஒரு வழக்கறிஞரிடம் லீகல் விஷயமாக பேசுவதற்காக வந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த பிளாஷ்டிக் கவர் தொலைந்து போய்விட்டது. பல முயற்சி எடுத்தும் தேடிப்பார்த்தார் கிடைக்கவில்லை காணமல் போன ஒரிஜினல் பேரண்ட் டாக்குமெண்ட் விபரம்

1. Doct. No. 1377/1990 dt. 7.6.1990 on the file of S.R.O. Vadalur
2. Doct. No. 2212/1991 dt. 13.11.1991 on the file of S.R.O. Vadalur
3. Doct. No. 2213/1991 dt. 13.11.1991 on the file of S.R.O. Vadalur
4. Doct. No. 2214/1991 dt. 13.11.1991 on the file of S.R.O. Vadalur

மேற்கண்ட ஒரிஜினல் பேரண்ட் டாக்குமெண்ட் யாரிடமாவது கிடைத்தால் எனது கட்சிக்காரரிடமோ அல்லது எனது விலாசத்திற்கோ தெரிவிக்கலாம் என்பதை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

A.S.BALASUBRAMANIAN
Advocate
No.2.Shopping Complex, Sidco Nagar,
Villivakkam, Chennai - 600 049,

பொது அறிவிப்பு

2020- ம் வருடம் ஜூலை மாதம் 25 -ந் தேதி சென்னை-600011, பெரம்பூர், செம்பியம், முகமதியர் தெரு, கதவு எண்.35/76 என்ற விலாசத்தில் வசிக்கும் காலஞ்சென்ற திரு.மிர் ரசா அலி, அவர்களின் குமாரர் M. மிர் காமில் அசன் ஆகிய எனது கட்சிக்காரர் அறிவிப்பின் பேரில் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், சென்னை மாவட்டம், பெரம்பூர் - வட்டம், செம்பியம் கிராமம், பழைய சர்வே எண்.104/2 பார்ட், பட்டாபடி T.S.No.15/2-ல் 990 சதுரடி அளவுள்ள மூன்று மாடிகள் கட்டப்பட்டுள்ள வீட்டினை எனது கட்சிக்காரரின் தகப்பனார் மிர் ரசா அலி அவர்கள் கடந்த 31.10.2002-ந் தேதி (1). திருமதி.முகமதி பேகம், (2). திருமதி.அசிகபேகம், (3). செல்வி. நசீமாபேகம், (4). மிர் அஜார் உசேன், (5). திருமதி.சல்மா பேகம், (6). மிர் அபித் உசேன், (7). மிர் அன்வர் உசேன், (8). மிர் ஆசாத் உசேன் ஆகியவர்களிடமிருந்து ஆவண எண்.7363/2002 ஆக கிரயப் பத்திரமாக கிரயம் பெற்று ஆண்டு அனுபவித்து வந்து, R.மிர் ராசா அலி அவர்கள் 14.4.2015-ந் தேதி அன்று இறந்து விட்டதால் அவரது பிள்ளைகள் (1). ஷாஜஹான், (2). ஸரின் சல்மான், (3). ஜபினா இ:ஃபிதிகார், (4). மிர் காமில்ஹசன், (5). ஷேஹர்பானு என்பவர்கள் வாரிசுதாரர் என்ற முறையில் மேற்படி சொத்தினை விற்பனை செய்ய J.கில்பர்ட் ரூசை ராஜா என்பவருக்கு கடந்த 24.6.2020-ந் தேதி அன்று கிரைய ஒப்பந்தம் செய்துள்ளதால் எனது கட்சிக்காரர் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்பதாலும் மேற்படி சொத்தினை கிரையம் செய்ய இருப்பதாலும் மேற்படி சொத்தில் நீதிமன்ற வழக்கு, அடமானம், கடன், அண்டிமாண்ட், கொலட்ரால் போன்ற எவ்விதமான உரிமை இருப்பின் இந்த விளம்பர அறிவிப்பு தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலமாக தங்களது மறுப்பினை அல்லது உரிமையினை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் மேற்படி சொத்தின் மீது எந்தவொரு உரிமை கோரலும் இல்லை என தீர்மானிக்கப்படும் என்பதையும் மேற்படி சொத்தினை எனது கட்சிக்காரர் விற்பனை செய்வதை கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன்.

P. Rajamanickam (Advocate)
Chennai High Court,
No.111, New Addl. Law Chamber
Broadway, Chennai-600104.

கிரைய பத்திரம் காணாமல் போனது பற்றி

எனது கட்சிக்காரர் திரு.M.வேணுகோபால் த/பெ. முனுசாமி கவுண்டர் வசிப்பிடம் எண். 6 பள்ளத்தெரு சோதியம்பாக்கம் கிராமம், சின்ன எழச்சேரி அஞ்சல், வெம்பாக்கம் தாலுக்கா திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவருக்கு சொந்தமான செய்யார் தாலுக்கா தற்பொழுது வெம்பாக்கம் தாலுக்கா சோதியம்பாக்கம் கிராம சர்வே எண்.96-ல் அடங்கிய வீடு மனையை அவர் கடந்த 05.04.1972 அன்று சுப்பிரமணிய கிராமணி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் தூசி சார்பதிவகத்தில் 1-ம் புத்தகத்தில் 1972 ஆம் ஆண்டின் 533 எண்ணாக பதிவாகியுள்ளது. அவர் கடந்த 22.07.2020 அன்று தூசி கிராமத்தில் சிராக்ஸ் எடுக்க சென்ற பொழுது தவற விட்டு விட்டார். எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

இதில் யாருக்கேனும் உரிமையிருந்தால் 15 நாட்களுக்குள் என்னை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

இது சம்பந்தமாக பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வது என்னவெனில் இந்தசொத்து சம்பந்தமாகயாரும் எவரிடமும் உடன்படிக்கை அல்லது வியாபாரம் எதுவும் செய்யவேண்டாம்.

இந்த பத்திரத்தினை யாரேனும் கண்டு எடுத்தால் எனக்கு தகவல் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

திரு.ப.ராஜமாணிக்கம், திருமதி.கோ.பரணி
வழக்கறிஞர்கள்
3-பி. மடம் தெரு
காஞ்சிபுரம்-631 501
9443222334
அலுவலக செல்போன் :7708828213
email: prmoffice16@gmail.com

MUNOTH FINANCIAL SERVICES LIMITED

Regd. Office : Suite No. 46&47 "MUNOTH CENTRE", 343, Triplicane High Road, 3rd Floor, Chennai 600 005.

CIN : L65991TN1990PLC019836

NOTICE

Pursuant to Regulation 29 read with Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, Notice is hereby given that a meeting of the Board of Directors of the Company will be held at Chennai on Monday, the 10th August 2020 to consider and take on record the Unaudited Financial Results of the Company for the first quarter ended 30th June 2020.

Investors may also refer to the websites:www.munothfinancial.com, www.bseindia.com.

For Munoth Financial Services Limited
Sd/-
Jaswant Munoth
Managing Director
(DIN : 00769545)

Place : Chennai
Date : 30.07.2020

தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 'ராமமந்திரம்', ராஜபாளையம் 626 117, தமிழ்நாடு

CIN : L26941TN1957PLC003566 — website: www.ramcocements.in

அறிவிப்பு

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 47(1)(a)ன்படி, 30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வெள்ளிக்கிழமை, 7 ஆகஸ்ட் 2020 அன்று நடைபெறுவதாக இருந்தது வெள்ளிக்கிழமை 14 ஆகஸ்ட், 2020 அன்று ஒத்திவைக்கப் பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் www.ramcocements.in மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com and www.nseindia.comலும் இந்த அறிவிப்பு உள்ளது.

தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்டுக்காக

இடம்: சென்னை — K. செல்வநாயகம்

தேதி : 30–07–2020 — செயலாளர்

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் சென்னை - 600110, பொன்னியம்மன் மேடு, வாகதேவ தோட்டம் மெயின் தெரு, கதவு எண்.45-ல் வசிக்கும் காலஞ்சென்ற நாராயணசாமி அவர்களின் குமாரர் திரு.N. பாண்டுரங்கன் அவர்கள், தன் மனைவி கோவிந்தம்மாள் என்பவரின் தாயார் ரங்கநாயகி அவர்கள் பெயருக்கும் அவரின் காலத்திற்கு பிறகு எனது மனைவி பெயருக்கும் கடந்த 11.02.1969-ந் தேதி செம்பியம் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.376/1969 செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் திரு.A.P. முருகேச நாயக்கர் அவர்கள் எழுதிக் கொடுத்த பழைய திருவள்ளூர் - மாவட்டம், அம்பத்தூர் - வட்டம், கொரட்டூர் கிராமத்தில் கிராம நத்த சர்வே எண்.771-ல் 07 செண்ட் விஸ்தீரணம் உள்ள இடத்தின் செட்டில்மெண்ட் பெற்ற ஆவணத்தினை கடந்த 08.07.2020 அன்று காலை 10.30 மணி அளவில் ஏகாங்கிபுரம் 4-வது மெயின் தெருவில் உள்ள வழக்கறிஞரை சந்தித்து கருத்துரு கேட்பதற்காக வந்து அருகில் உள்ள கடையில் ஜொராக்ஸ் எடுக்க சென்ற போது தொலைந்து விட்டார். மேற்படி அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் எனது கட்சிக்காரரிடமோ அல்லது என்னிடமோ ஒப்படைக்க வேண்டியது.

A.MANNULINGAM
Advocate - Commissioner of Oaths
SRIVARI COMPLEX, Shop No.3,341/2,Paper Mills Road,
Perambur, chennai-11

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் , சென்னை 600077, அயப்பாக்கம், TNHB, எண்.2022-ல் வசிக்கும் கே. தரணி ராஜா அவர்கள், வட சென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் உப பதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட எண்.73, அயப்பாக்கம் கிராமம், டோனைக்கல் கேம்ப் ரோடு,, சர்வே எண்.15/1A1A2A-ல் அடங்கிய 2180 சதுரடிகள் கொண்ட காலிமனையை (எல்லைகள் : வடக்கில்: 40 அடி டோனைக்கல் கேம்ப் ரோடு, தெற்கில்: சர்வே நெ 15/6-ல், அடங்கிய காலி மனை, கிழக்கில்: சர்வே நெ.15/6-ல், அடங்கிய காலி மனை, மேற்கில் சர்வே நெ.15/1A1A1-ல் அடங்கிய காலி மனை) அதன் தற்போதைய உரிமையாளரான, திரு. பி நந்தகுமார் த/பெ. லேட் .பக்தவச்சலம் அவர்களிடமிருந்து கிரயம் பெற உத்தேசித்துள்ளார். ஷை சொத்தில் ஏதாகிலும் உரிமை, விருப்பு , கேட்பு, அடமானம், ஆட்சேபணை உள்ளவர்கள் அதனை என்னிடம் இந்த அறிவிப்பு கண்ட 10 தினங்களுக்குள் எழுத்து பூர்வமான ஆதாரங்களுடன் தெரிவிக்குமாறும், தவறும் பட்சத்தில் ஷை சொத்தில் எவ்விதமான வில்லங்கங்களும் இல்லை எனக் கருதி,, மேற்படி சொத்தினை கிரயம் செய்ய தேவையான நடவடிக்கைகளை என்னுடைய கட்சிக்காரர் மேற்கொள்ளுவார் எனவும், அதன்பின் எழுப்பப்படும் எவ்விதமான ஆட்சேபணைகளும் என் கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்: சென்னை
நாள் : 31.07.2020

சி. கிருபாநிதி, அட்வகேட்
901 சி. பிளாக், சிவாலயா
எத்திராஜ் சாலை,
எழும்பூர், சென்னை 600008
செல்: 9444195431/8248421809